இசை விருந்து

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

சுவாமி சுத்தானந்த பாரதியார்

சுவாமி சுத்தானந்த பாரதி[illegible]ல்கள்

பக்திப் பரவசம்

இதில் 121 [illegible] தனங்கள் அடங்கியுள்ளன. அனைத்தும் அரு[illegible] பொருட்சுவையும், தெய்வாவேசமும், ஞான[illegible] நிறைந்த இனிய ஸாகித்யங்கள்; பாட்டுக் க[illegible]கு மிகவும் ஏற்றவை. எல்லா மதத்தினரும் இக்[illegible] களைப் பாடலாம். உலகின் இயல்பும், ஆ[illegible] பெரும் வழியும், தெய்வ சாக்ஷாத்கார[illegible] தனங்களும் இக் கீர்த்தனங்களில் பொ[illegible]ன. இவற்றை இன்னிசையுடன் பாடு[illegible] தனமாகும்.

வி[illegible] 10.

[illegible]லயம்,
இராமச்சந்திரபுரம்,
திருச்சி ஜில்லா.

இசை விருந்து

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

சுவாமி சுத்தானந்த பாரதியார்
பாடிய கீர்த்தனங்கள்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. சு. சண்முகம் நூலகம்

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா

உரிமை பதிப்புற்றது] 1941 [விலை அணா 3

First Edition: October 1941

'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

SHAKTI PRESS LTD., MADRAS.

பதிப்புரை

தமிழ் இசைக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது. தமிழே இனிமை; தமிழ் இசையின் இன்பத்தைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை; காதுள்ள பேர் கேட்டு அனுபவிக்கலாம். தமிழில் உள்ள இசை அமுதம் போல் அவ்வளவு இன்பம் வேறு எந்த மொழியிலும் இல்லையென்பதைத் துணிந்து கூறுகிறோம். ஓசைமட்டுமன்று; சொல்மட்டுமன்று; தமிழிசை பொருளும் இனிமையும் நிறைந்தது; தெய்வச் சுவை பெற்றது. தெய்வப் பெரியார் தவயோக சித்தியால் திருவாய் மலர்ந்தருளிய நம் அருட்பாடல்களுக்கு இணையாக வேறெந்தப் பாடலைச் சொல்ல முடியும்?

தேவார திருவாசகங்கள், திருவருட்பா, தாயுமானவர், பட்டினத்தார் பாடல், திருப்புகழ், காவடிச் சிந்து, குஞ்சரிபதங்கள், முத்துத்தாண்டவர் பதங்கள், இக்காலம் தோன்றிய புலவர் பாடல்கள்— எத்தனையோ தமிழில் குவிந்து கிடக்கின்றன. இந்த இன்பக் குவையை மதியாமல் நாம் பிறமொழிப் பாடல்களில் சொக்கி உறங்கினோம்.

எழுந்தனர் உணர்ச்சிபெற்ற அறிவாளர்! "தமிழர் பெரும்பாலும் தமிழ்ப்பாடலே பாடவேண்டும்; கச்சேரிகளில் தமிழ் முழங்கவேண்டும்" என்று கிளர்ச்சி செய்தனர். இக் கிளர்ச்சிக்குப் பெரிய ஆக்கமளித்துவருபவர், செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணாமலை செட்டியாரவர்கள் ஆவர்.

எங்கள் நிலயம் சென்ற பல்லாண்டுகளாகத் தமிழ்ப் பணி செய்துவருவதைத் தமிழர் நன்கறிவர். தமிழிசை வளம்பெற வேண்டியே நாங்கள் பாமலர்கள் சில வெளியிட்டுள்ளோம். அவை எல்லாம் சுவாமி சுத்தானந்த பாரதியார் பாடியவை. அவற்றினின்றும் கச்சேரிக்கு ஏற்றபடி இருபது இனிய உருப்படிகளைத் தேர்ந்தெடுத்து இசைவிருந்தாக வெளியிட்டுள்ளோம்.

இந்நூலுக்கு அன்புடன் முன்னுரை எழுதிய புலவர்மணியும், "இசை இயக்கத்தின் விசை"யுமாகிய, நம் திருவாளர் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கு எங்கள் நன்றி உரியதாகுக.

தமிழிசை ஓங்குக!

இராமச்சந்திரபுரம்,
20-10-'41.

அன்பு நிலயத்தார்.

சஉ (க0)-க-க000

சமர்ப்பணம்

இந்நூல்

தமிழிசை வளர்க்கும் வள்ளல்

ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார்

அவர்கட்கு உரியதாகுக

முன்னுரை

[ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார்]

உலகத்தில் எந்த நாட்டுக்குப் போனாலும் சரி, மக்கள் தங்கள் தாய்மொழியிலேயே கவியும் பாட்டும் கூத்தும் வைத்து அனுபவிக்கிறார்கள். தமிழர்களாகிய நாமும் முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்னெல்லாம் அப்படித்தான் அனுபவித்துவந்தோம். எப்படியோ இடையில் தமிழ்ப் பாட்டுக்கு கௌரவம் கொடுக்கிறதில்லை என்று ஏற்பட்டுவிட்டது. இப்போதோ, தமிழ்ப் பாடல்தான் விளங்குகிறது. 'தமிழ்ப் பாடலையே கேட்க வேண்டும், அனுபவிக்கவேண்டும்' என்று நம்மவருக்கு என்றும் இல்லாத ஆத்திரம் வந்துவிட்டது. ரொம்ப நல்ல காரியம்.

வருஷக்கணக்காகப் பாடிக்கொண்டிருக்கத் தமிழில் வேண்டியமட்டும் பாடல்கள் இருக்கின்றன. நவரசங்களையும் கொழிப்பதற்கு வேண்டியமட்டும் பாடல்கள் இருக்கின்றன. பக்தி மயமான பாடல்கள் என்றால் அவைகளுக்கு அளவே இல்லை. ஆனால், பாடுவார்தான் இல்லை!

தற்காலத்திலும் எத்தனையோ பேர் தமிழ்ப் பாடல்கள் செய்திருக்கிறார்கள். எனினும், அவற்றுள் எல்லாம் **ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார்** அவர்கள் பாடிய பாடல்கள் உயர்ந்த உண்மைகளை உள்ளிருந்து ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய பாடல்கள் தற்காலத்துக் கண்ணாடி லாந்தல்களைப்போல் உள்ளிருக்கும் உண்மையை (சுடரைத்தான்) காட்டிக் கொண்டே யிருக்கும். இந்த '**இசை விருந்தில்**' 18-வது பாடல் "**ஆனந்த நடனம்**" ரொம்ப அருமையாய் வாய்த்திருக்கிறது. **அது கவிதான்; பாட்டுத்தான்; நடனத்துக்கு ஒத்த பாட்டுத்தான்.** மற்றப் பாடல்களையும் பண்ணோடுத்துப் பாடக் கேட்டால், தமிழர் அனுபவிப்பார்கள்; உயர்ந்த அனுபவ நிலையையும் அடைவார்கள். தமிழ்நாடு தமிழ்ப் பாடல்களின் சுவையைக் கண்டு அவைகளைப் போற்றிவரும்படி இறைவன் அருள்புரிய வேணும்.

(சென்னை, 15-10-'41)

அட்டவணை

எண்	பெயர்	இராகம்
1	பக்திப் பரவசம்	மயூரத்வனி
2	பக்திப் பிரசாதம்	கல்யாணி
3	காலனை உதைத்தவனே	தோடி
4	எனக்கென்ன கவலை	தன்யாசி
5	பயப்படாதே	பரசு
6	பழனியப்பன்	மோஹனம்
7	கண்டவர்	பந்துவராளி
8	அலையாதே	பியாகடை
9	ஜகமாயை	சங்கராபரணம்
10	யாரோ	சுத்த பங்காளா
11	கண்ணு கண்ணு	கமாஸ்
12	பந்தம் விலகல்	ஆனந்த பைரவி
13	கடைக்கண் பாராயோ	ஸஹானு
14	மங்கள கானம்	ஹம்ஸத்வனி
15	தரிசனம்	பிலகரி
16	செல்வத் திருமகளே	பூரிகல்யாணி
17	ஆசிர்வாதம்	ஆரபி
18	ஆனந்த நடனம்	கேதாரம்
19	குஞ்சித பாதத்தில்	பைரவி
20	மங்களம்	சுருட்டி

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

இசை விருந்து

1. பக்திப் பரவசம்

இராகம்-மயூரத்வனி] [ஆதி தாளம்

("ராகசுதாரச" மெட்டிற் பாடலாம்)

பல்லவி

பக்திப் பரவசத்தால் பாவன மாவோம்
பரமா னந்தத்தைப் பெறுவோம் (பக்தி)

அனுபல்லவி

சுத்த முக்த நித்ய ஸத்ய ஸமரஸன்மேல் (பக்தி)

சரணம்

ஹரி ஹர மஹாதேவ அல்லா பரமபிதா
முருகா சத்குருவென்றே உருகிமனங்குவிந்த (பக்தி)
நாமரூ பங்கடந்த ஞானப் பரஞ்சோதியை
ஓம்தத்ஸத் ஓம் என்ற உண்மை மந்திரம் ஓதி (பக்தி)

---

2. பக்திப் பிரசாதம்

இராகம் கல்யாணி] [சாப்பு தாளம்

பல்லவி

சித்த மிரங்கியுன்—பக்திப்ர சாதமருள்,
தில்லை நடராஜனே ! (சித்தம்)

அனுபல்லவி

மத்தலை தயிர்போலென்—மனமலை கின்றதே
மாய வலையினை—மருவத் துடிக்கின்றதே! (சித்)

சரணம்

ஐம்புலக் கணைகளைத் தடுத்தே—ஆசை
ஆணவத் திற்குதை கொடுத்தே,
நம்பும் அடியாரை யடுத்தே—எந்
நாளுமுன் அன்பினை மடுத்தே,
நெஞ்சக் கமலத்துன் செஞ்சிலம் படி வைத்தே,
நிருத்தமிட் டுன்புகழ்—பொருத்தமா யிசைத்தே,
அஞ்சலிக் கரத்தினைக் கொஞ்சிச் சிரங்குவித்தே,
அத்தாநான் காணவுன் அம்பலக் கூத்தினை (சித்)

குஞ்சித பாதத்தைப் பிடித்தேன்—என்
குறைகளைச் சொல்லிக் கண்ணீர் வடித்தேன்.
தஞ்சமென் றுன்கை யென்னை விடுத்தேன்—சிவ
தாரக நாமமே படித்தேன்.
வஞ்ச முயலகனை வாட்டிய பாதனே,
வாதவூ ரார்க்கொளி காட்டிய வேதனே,
நஞ்சை நயந்தமரர் நலிவுதீர் நாதனே,
நானென னவுளத்தே நடமிடும் போதனே (சித்)

ஓயாத கவலையை யோட்டி—அருள்
ஒளியினை யென்கண்முன் காட்டி
வாயாடும் வாசலைப் பூட்டி—மௌன
மந்திர தியானத்திற் கூட்டி,
தூயநல் லறிவினைத் தூண்டியென் னுள்ளத்தில்
துள்ளி விழாதினித் துயர்மனங் கள்ளத்தில்
தாயான் கருணைக்கை தந்தென்னை மெள்ளச்சேர்
சத்திய ஜோதிசுத் தானந்த வெள்ளத்தில் (சித்)

3. காலனை யுதைத்தவனே!

இராகம்-தோடி] [ஆதி தாளம்

பல்லவி

காலனை யுதைத்தவனே—காமப்பகையை
கடைக்கண்ணால் எரித்தவனே—அரனே
(காலனை)

அனுபல்லவி

மூல குண்டலி சக்தி—பாலை சஹஸ்ர்ாரத்தில்
முக்கனல் எழுந்திட முயங்கும் சக்தி சிவனே
(காலனை)

சரணம்

கனவிலும் நனவிலும் எனைப்பிடித் துவருத்தும்
கவலையை யுதைத் தெறிவாய்...
மனமாயை யாகிய மதியிலியைத் தவக்
கனலினால் எரித்திடுவாய்...
புனித முனிவர்க் கன்று புகன்ற சிவஞான
போதமெனக் கருள்வாய்...
இனிதுசிற் சக்தியாற் கனிந்து கனிந்துன் னுடன்
இரண்டறக் கலந்திடும்
வரந்தனை வேண்டினேன் (காலனை)

---

4. எனக்கென்ன கவலை?

இராகம்-தன்யாசி] [ஆதி தாளம்

பல்லவி

எனக்கென்ன மனக்கவலை—எந்தாய்க்கன்றோ
தினந்தின மென்கவலை...

அனுபல்லவி

மனத்திலும், செயலிலும், வாக்கிலும், வாழ்விலும்,
அனைத்துமாய் நின்றென்னை ஆண்டவள் இருக்கையில்
(எனக்)

சரணம்

அல்லலை ஓட்டுவாள்......வல்லமை நாட்டுவாள்.
அம்புலி காட்டியும் அமுதினை யூட்டுவாள்...
தொல்புவி யெனக்கொரு தொட்டிலாய் ஆட்டுவாள்...
சுத்த முக்தசமத்வச் சுடரெனுள் ஏற்றுவாள் (எனக்)

கண்மலர்க் கருணையால் புண்களைத் துடைப்பாள்...
கைம்மலர் ஆசியால் உய்கதி கொடுப்பாள்...
தண்ணருட் புன்னகையாற் சக்திக் கனல் பெருக்கித்
தாங்கிடும் ஜகன்மோக ளாங்கி துணையிருக்க (எனக்)

5. பயப்படாதே !

[இராகம்-பராசு] [ஆதி தாளம்

பல்லவி

பயப்படா திரு மனமே—நல்ல
பக்தரைக் காக்கும் பரா சக்தி துணை யுண்டென்றும் (பயப்)

அனுபல்லவி

அயலவர் வாழ்ந்தால்வெம் புயலெனச் சீறிடும்
ஆத்திரப் பொறாமையின் நாத்திகக் கொடுமையால் (பயப்)

சரணம்

நயவஞ்சகம் பின்னே நகைத்துப் புறம்பேசினும்,
நமன்பாச மேயெதிர்த்து நலிவுற வீசினும்,
சுயநல வகங்காரம் துயர்பல செய்தாலும்,
துஷ்டப் பகைவர் உன்மேற் சுடுசரம் பெய்தாலும்,

பதறாதே—சித்தஞ்
சிதறாதே—அன்பை
உதறாதே—விம்மிக்
கதறாதே..............

தயை வடி வானதேவி அபயந்தந் துன்னைக் காப்பாள் (பயப்)

6. பழனியப்பன் துணை

இராகம்-மோஹனம்.] [ஆதி தாளம்

பல்லவி

பழனியப்பன்......துணையே—நம்பின பேர்க்குப்
பாரினில் யாவர் இணையே (பழனி)

அனுபல்லவி

குழகன், கதிர்வடிவேற் குமரன், அமரர் போற்றும்
அழகன், சிவப்புதல்வன், ஆறுமுகன், குகன் (பழனி)

சரணம்

அஞ்ச வரும் பகையைப்-பஞ்சுபட வுதைப்பான்,
வஞ்ச நிருதர் வீழச்-செஞ்சுடர் வேலெ டுப்பான்,
தஞ்சமென் றவர் தூய-நெஞ்சகத் திலிருப்பான்,
துஞ்சாக் குண்டலி சக்தி-கொஞ்சிக் குலாவுகின்ற (பழனி)

காட்டி விஷயசுகம்-ஊட்டி மயக்குகளை,
மாட்டிப் பந்த விலங்கைப்-பூட்டி இருட் சிறையில்,
தீட்டிச் சினக்கத்தியை-நீட்டி யமபாசத்தை
வாட்டுங் காமாதிகளை-ஓட்டிப் பேரின்பம் பெறப் (பழனி)

கூடி முகமனுரை-யாடிப் பிறகு மெல்ல
ஊடி, நல்லறிவினைச்-சாடிப் பணம் பறிக்க
மோடி செயும் பாசத்தை-நாடி யழிந்திடாமல்
*ஓடி, நல்லவர் கூட்டம்-தேடித் திருப்புகழைப்
பாடி ஆனந்த நடம்-ஆடி மனங்குளிர... (பழனி)

நாகச்சட்டைபோன்றது-தேகம் அதிற்கொள்ளேன் வீண்
மோகம், அதன் பிறப்ப னேகம்; இதயப் பொருள்
ஏகம், அதுநானென்வி-வேகம் வளர்ந்துஞானத்
*தாகந் தணிந்து பரி-பாகமடைந்து சிவ
யோகம் புரிந்து சுத்த-போகம் வளர்ந்து பொங்கப் (பழனி)

---

* இந்த இரண்டு அடிகளும் முடுகு.

7. கண்டவர்

இராகம்-பந்துவராளி] [ஆதி தாளம்

பல்லவி

கண்டவர் மறவாரே கண்ணுவுன்னைக்
கலந்தவர் பிரியாரே... (கண்டவர்)

அனுபல்லவி

மொண்டென் உயிரையுண்ட மோகன காந்தனே
(கண்டவர்)

சரணம்

நீல மதிபோல் முகமும்—அதில் முத்து
நிலவுபோலே நகையும்...
வேலைப் போலே விழியும்—அதில்விளங்கும்
வீரக் கருணைக் கடலும்,
சோலை மலர்போல் வனப்பும்—அதன்மிசை
சொக்கும் தெய்வக் கனலும்...
ஞாலத்தை வசஞ்செய்யும் கோலத்தைக்கொண்டருள்
பாலித்தென் மனையினுட் கால்வைத்த காட்சியை
(கண்டவர்)

---

8. அலையாதே !

இராகம்-பியாகடை] [சாப்பு தாளம்

பல்லவி

அலையாதே...பேய் நெஞ்சமே—ஆடிமேகம்போற்
கலையாதே மடநெஞ்சமே ! (அலை)

அனுபல்லவி

உலகெல்லாம் திரிந்தாலும் உண்மை விளங்காது
கலையெல்லாம் கற்றாலும் கருத்துத் தெளியாது (அலை)

சரணம்

பலபல வகையாகப் பரந்த வுலகமெல்லாம்
பஞ்சபூதவிகாரம்; பார்த்ததை மயங்காதே...
மலைபோல வுன்னுள்ளே நிலைபெறத் தயங்காதே...
வளரும் சிவானந்த வாழ்வினை மறந்து நீ (அலை)

---

9. ஜக மாயை

இராகம்-சங்கராபரணம்] [ரூபக தாளம்

பல்லவி

போ, போ, போ, ஜகமாயையே—கிட்டவராதே,
பொய்ம்மனத் தின் சாயையே !

அனுபல்லவி

தோதோவென்றால் மீதேறித் தோளை யொடிப்பாய் நீ
தோழன்போல் வந்தென்னை வாழவொட்டா தடிப்பாய்
(போபோ)

சரணம்

கட்டிக் கரும்பிருக்கத் தங்கக் கனியெனவுன்
எட்டியைப் புசிப்பாரோ ?
சுட்டிப் புலன்களைக் கட்டினோர், உன் பின்னே
துள்ளிக் குதிப்பாரோ ?
நெற்றிக் கண்ணன்அடி பற்றிய நின்மலர்
நின்வலை வீழ்வாரோ ?
சிங்கார சேட்டைகள் காட்டி நடிப்பாய்,
சிக்கிய மூடரின் உயிரைக் குடிப்பாய்
தங்கக் கரத்தினால் தட்டிக் கொடுப்பாய்,
தடிகொண்டு பின்னவர் தலையை யுடைப்பாய் நீ
(போபோ)

பஞ்சமா பாதக நெஞ்சுரங் கொண்டோருன்
      பக்த கோஷ் டிகளன்றோ ?
வெஞ்செயல் அரக்கரின் விபரீத மெல்லாமுன்
      விதவிதச் சேஷ்டை யன்றோ ?   [காட்டுவாய் ;
பெண்ணென்றும் மண்ணென்றும் பொன்னென்றுங்
      பிடிபட்ட மாந்தரைப் பேயென வாட்டுவாய் ;
கண்ணிலே பொடி தூவிக் கந்தர்வ லோகங்கள்
      காணென்றே புலிநரிக் காட்டினில் ஓட்டுவாய்
(போபோ)

தின்னக் கொடுப்பதுபோல் அன்னத்தில் ஒருபிடித்
      தெருமண்ணைப் போட்டிடுவாய்
அன்னைபோல் வந்துபின் அரக்கியாய் என்னைப்பேர்
      ஆபத்தில் மாட்டிடுவாய்
கனவினில் நினைத்தாலும் கவலையைப் பெருக்குவாய்
      காரியக் கற்பனை காட்டி மயக்குவாய்
உனக்கிடந் தருமட்டும் உள்ளத்தை உருக்குவாய்,
      உண்டெனக் கைப்பற்றிச் சண்டை முறுக்குவாய்
(போபோ)

---

10. யாரோ !

இராகம்-சுத்த பங்காளா]   [ஆதி தாளம்

(‘ தொலினே சேசின ’ போல)

பல்லவி

யாரோ வந்தென்னை ஆசைகாட்டி மறைந்தான்
      அவனையே தேடித்தேடி, யலைகுதென் சித்தமே
(யாரோ)

அனுபல்லவி

பேருமறியேன் அவன் ஊரு மறிகிலேன்...
பெற்றவர் யாரெனக் கற்றவரும் அறியார்
(யாரோ)

சரணம்

கண்ட திசைகளெல்லாம் கண்ணிலே பேசியே
காணமல்ஒளிந்தஎன் கள்வன் முகந்தோன்றுதே...
விண்டவர் கண்டிலர் கண்டவர் விண்டிலர்...
விந்தை முறுவல் செய்தோர் மந்திரப்பொடி தூவி
(யாரோ)

---

11. கண்ணா ! கண்ணா !

இராகம்-கமாஸ்] [ஆதி தாளம்

காதலெல்லாம் கொள்ளை கொண்டாய் கண்ணாகண்ணா
கடைக்கண் பார்த் தருளாயோ கண்ணாகண்ணா !
வேதமெனக் குன் இசையாம் கண்ணாகண்ணா
வேணுகானஞ் செய்வாய் என்னுள் கண்ணாகண்ணா !
யாக்கையுன் பிருந்தா வனம் கண்ணாகண்ணா
ஆடும் உயிர்நீ யதில் கண்ணாகண்ணா !
வாழ்க்கை உனது ராதை......... கண்ணாகண்ணா
வாரி யணைத்துக் கொள்வாய் கண்ணாகண்ணா !
பொங்கும் கடலென் ஆர்வம் கண்ணாகண்ணா
பூரண மதியுன் முகம் கண்ணாகண்ணா !
பங்கயம் என் அன்புமலர் கண்ணாகண்ணா
பரிதியுன் புன்னகை யாம் கண்ணாகண்ணா !
துங்கமாம் அந்தக் கரணம் கண்ணாகண்ணா
துலங்கும் கோபிமார் கூட்டம் கண்ணாகண்ணா !
செங்கைக் களை யிணைத்துச் கண்ணாகண்ணா
செய்யுன் ராசக் ரீடைகள் கண்ணாகண்ணா !

---

12. பந்தம் விலகல்

இராகம்-ஆனந்தபைரவி] [சாப்பு தாளம்

பல்லவி

பந்தம் விட்டாலே சுகமே—யதிற்சிறிதும்
பட்டு முழியாதே—யகமே!

அனுபல்லவி

எந்தெந்த வுறவினர் இதமென்ன பேசினுந்
தந்திர மாயவர் தம்மையே நேசிப்பார் (பந்த)

சரணம்

சாதி முறைகளையும் தங்கத்தா ளளப்பார்கள்;
சலியாது கொடுத்தாலும் ஒழியாது கேட்பார்கள்;
போதித்த ஞானத்தைப் பேதித்துச் சிதைப்பார்கள்;
பொய்யகங் காரத்திற் பொழுதெல்லாந் தோற்பார்கள்
(பந்தம்)

வெள்ளி நடமாடினல் வெண்ணகை காட்டுவார்;
வேதாந்த ஞானமென்றால் விரைந்தே கம்பிநீட்டுவார்;
கள்ளக்கும் பிடுபோட்டுக் காரியம் சாதிப்பார்;
'கண்டாற் காமாட்சி நாய்க்கன்' கதையை ஆமோ
[திப்பார். (பந்தம்)

---

13. கடைக்கண் பாராயோ?

இராகம்-சஹானு] [ரூபக தாளம்

பல்லவி

கல்லோ உனது நெஞ்சம்—ஐயா என்னைக்
கடைக்கண் பாராயோ கொஞ்சம்... (கல்)

அனுபல்லவி

அல்லும் பகலும் நமச் சிவாய அபயம் என்றே
சொல்லியென் உள்ளமுன் சோதியருளைக் கெஞ்சும் (கல்)

சரணம்

'அப்பனே!' என்றடி பற்றும் அடியார்க்குன்
அன்பை மறைப்ப துண்டோ?
தப்பிதம் பலகோடி செய்த மகனையும்
தாயார் வெறுப்ப துண்டோ?
இப்புவிக் கோயிலில் எங்கும் உயிர்மேனியாய்
இருப்பதுன் சக்தி யன்றோ?
எப்போதாயினும் வந்தென் இதயவீட்டில் உறைவாய்
இறைவா, இறைவா என் முறையினைக் கேளாயோ? (கல்)

---

14. மங்கள கானம்

இராகம்-ஹம்ஸத்வனி] [ஆதி தாளம்

(" ரகு நாயகா " போல)

பல்லவி

அருள் புரிவாய், கருணைக் கடலே!
ஆருயிர் அனைத்தும் அமரவாழ்வு பெறவே (அருள்)

அனுபல்லவி

பரிபூர்ண சதா னந்த வாரியே ...
பக்த ரக்ஷகனே பரமாத்மனே ... (அருள்)

சரணம்

அருணோ தயம்போல் ஆத்ம சாந்தியும்,
அறிவுண்மை யன்புந் திருவுந் தருவாய்;
தருமப் பயிர் வாழுந் தருணமா மழையே......
தங்குல கெங்கிலும் மங்களம் பொங்கவே... (அருள்)

---

15. தரிசனம்

இராகம்-பிலகரி] [ஆதி தாளம்

பல்லவி

தரிசனம் செய்திடுவோம்—ஜகன்மாதாவை
சக்தி ஓம் சக்தி ஓம் என்று வணங்கி நின்றே (தரி)

அனுபல்லவி

பரம சுகானந்தம் பாலிக்கும் அன்னையை
பவ்ய ஜனங்களெல்லாம் திவ்ய ஜீவனம் பெறத் (தரி)

சரணம்

அருண நகை முகமும், கருணைபொழி யகமும்,
அஞ்சலி யளித்திடும் செஞ்சுடர்க் கரங்களும்,
மரண பயமொழிக்குங் கிரண விழிக்கனலும்,
மங்கல சாந்தமும் பொங்கு மஹேஸ்வரியைத் (தரி)
வான்வளி இடமெல்லாம், கான்மலர் வனமெல்லாம்
வளம்பெறுங் கோயிலாய் விளங்கும் அருட்சுடரை
நானென வுயிர்தோறும் நடம்புரி யும் அறிவை,
நாதவிந்து கலையாம் ஆதிபராசக்தியைத் (தரி)
அருவிக ளுடன் சோலைக் குருவிகளுடன் பாடி
ஆனந்தக் கூத்தாடி அன்புடன் கொண்டாடி,
இருவகை மனத்தினை ஒருமையுள் ளடக்கியே
இதயமலரிலும் இன்னுயிர் உலகிலும் (தரி)

---

16. செல்வத் திருமகளே !

இராகம்-பூரிகல்யாணி] [சாப்பு தாளம்

பல்லவி

எல்லாரும் உலகினில் இன்பமாய் வாழச்செய்
செல்வத் திருமகளே !

அனுபல்லவி

பொல்லா வறுமைப்பிணி
யில்லாது—துயர்வினை
நில்லாது—ஸௌபாக்யம்
பல்க வளமை நல்கி (எல்லாரும்)

சரணம்

முல்லை முறுவலால் உள்ளங் குளிரச்செய்
மோகன சுந்தரியே
அல்லிக் கரத்தினால் ஆசீர்வதித்துப் பர
மானந்தம் தந்தருளே...!
அல்லும் பகலும்புகழ்
சொல்லும் உள்ளன்பரின்
ஆவியை அழகின்பக்
காவியம் ஆக்குவாய் (எல்லா)

பொங்கும் கருணைவிழி பார்த்துச் சுகபோக
போக்கியம் மிகத் தருவாய்.
செங்கம லபாதம் சிரத்தினில் வைத்தென் றும்
சேமம் அளித்திடுவாய்...!
மங்கள மனையறம்
தங்கம்போல் விளங்கவே
மண்மிசைப் புண்ணிய
விண்ணிசை யோங்கவே. (எல்லா)

---

17. ஆசீர்வாதம்

[இராகம்-ஆபி] [ஆதி தாளம்

பல்லவி

ஆசீர் வாதம் தருவாய்—ஜகதீஸ்வரி
அன்புப் புன்னகை புரிவாய் (ஆசீர்)

அனுபல்லவி

தேசு லாவுந் திருச் செந்தா மரைக் கையால்
தீரக் கனல் பெருகிப் பூரணம் பொலிந்திட (ஆசீர்)

சரணம்

சித்த சலனங்களை ஒழிப்பாய்—எம் உள்ளத்தில்
திவ்யப்ர காசமாய்ச் செழிப்பாய்
சுத்த சுதந்தரம் கொடுப்பாய்—எம் மனத்தினைத்
துண்டுசெய் மாயத்தைத் தடுப்பாய்...
சத்திய ஜோதி—ஜீவன்
முக்தி—சச்சிதானந்த
சித்தி விளங்க—யோக
சக்தி மிகப் பொழிந்துன் (ஆசீர்)

---

18. ஆனந்த நடனம்

இராகம்-கேதாரம்] [ருபக தாளம்

பல்லவி

ஆனந்த நடன மாடினாள்—சச்சி
தானந்த நடன மாடினாள்—பராசக்தி (ஆனந்த)

அனுபல்லவி

வானும் புவியும் வணங்கி மகிழ்ந்திட
ஞான வெளியினில் வீணை 'ஓம் ஓ' மென (ஆனந்த)

சரணம்

பஞ்ச பூதங்கள் முழங்கக்—குணங்கள்
பாய்ந்து தாளம் வழங்க...
அஞ்சு தொழிலுந் துலங்கக்—காலம்
அதிரப் புவிகள் குலுங்க......

தஞ்சந் தஞ்சமென்றுள் ளன்பர் முறையிடத்
தந்தாம், தந்தாம் தாகிட தகதீம் என்ன (ஆனந்த)

கலி யரக்கர்கள் வீழ—மீண்டும்
க்ருதயுகத் தேவர் வாழ...
பொலியு நலங்கள் சூழ—மங்களப்
புதிய வாழ்க்கை பொங்க......
சலிப்பில்லாமல் சதாசிவனுடன்
ததிகிணதோம், ததிங்கிணதோம்
தளாங்கு த்ரிகடத் தோமென (ஆனந்த)

19. குஞ்சித பதநிழல்

இராகம்-பைரவி] [சாப்பு தாளம்

பல்லவி

தில்லை நடராஜனே—சிவகாமி நேசனே
—உன்னன்பல்லால்
இல்லை யெனக்கோர் யோசனை (தில்லை)

அனுபல்லவி

அல்லும் பகலுமுன் ஆனந்த நடனத்தை
அகிலமெல்லாங் காணும்
அறிவெனக் கருளுவாய் (தில்லை)

சரணம்

குஞ்சித பதநிழல் இருப்பேனே—அதைக்
கொஞ்சிக் கொஞ்சித் தமிழ் சுரப்பேனே
அஞ்சலிக் கரத்தினல் ஆசிபெற்றுன் சக்தி
ஆடலில் அனுதினங்—கூடி மகிழ்வேனே (தில்லை)

20. மங்களம்

பல்லவி

இராகம்-சுருட்டி] **[ஜம்பை தாளம்**

மங்களமாய் வாழ்க—உலகெல்லாம்
வான்கருணை சூழ்க

அனுபல்லவி

பொங்குக எங்கிலும் பொன்னும் பசுமையும்
போகமும் த்யாகமும்
யோகமும் ஓங்கியே (மங்கள)

சரணம்

கோர நிருதரின் குண்டுப் புகைகளும்
போரும் பொறாமையும் பொய்களும் போன்றவே...
வீரமும் அத்யாத்ம
தீரமும் சாந்தமும்
பாரத சக்தி
பரவிப் பொலிகவே! (மங்கள)

மடமை யிருளும், வறுமைத் துயரும்
அடிமை நரகக் கொடுமையும் தீர்கவே...
கடமையில் வெற்றிக் கதிர்கள் பொழிகவே
கல்வியும் பல்வகைச்
செல்வமும் மல்கவே! (மங்கள)

அன்பும் அருளும் அறம்பொரு ளின்பமும்,
ஆற்றலும் ஆயுளும் போற்றிப் பெருகவே
கண்கள் இரண்டெனப் பண்புடன் கூடிய
காதலர் இல்லறக்
கற்பகம் ஓங்கவே (மங்கள)

சாதிமத நிறச் சண்டைவளர்த்திடும்
பேத புத்தியின் பிழைகள் ஒழிகவே
ஆதிப் பொருளின் அருட்பெருஞ்சோதியில்
ஆருயிர் யாவையும்
ஓர்குல மாகவே (மங்கள)

துரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

கள்

1. தம் ... கள

இவை அடிகளின் ... தல் எழுந்த வீரப் பாடல்கள். ஒவ்வொரு ... வெற்றைப் பாடிப் பயன் பெறவேண்டும்.

விலை ...

2. கவிக் கனவு ...

இதில் அடங்கிய இசை ... ற்கையழகின் முன்னே தியா..ரிக்கும்பே ... உள்ளத்தில் பூத்தவை. இயற்கையில் கட ... இக் கீதங்கள் மிகவுயர்ந்த கலைச் சுவையு ... பெற்றவை. தமிழிசையில் கலைச்சுவை வே ... ப்பாடல்களைப் பாடியனுபவிக்க வேண்டும்.

விலை ...

...பு நிலயம்,
இராமச்சந்திரபுரம்,
திருச்சி ஜில்லா.

சக்தி * ஓம் * சக்தி